7. அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது குறித்த திர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்றுமுன் எழுப்பப்பட்ட சிக்கல் குறித்த தீர்ப்புரை :

23–7–1990 அன்று அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் வெவ்வேறு கடிதங்களைப் பேரவைத் தலைவர்க்குக் கொடுத் துள்ளனர். அதில், திரு. திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. உகம்சந்த் ஆகிய மூவரும் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வகித்து வந்த துணைத் தலைவர், கொறடா ஆகிய பதவிகளில் கீழ்க் கண்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்	..	துணைத் தலைவர்
திரு. கே. அர்ஜுனன்	..	கொறடா
திரு. துரை. இராமசாமி	..	செயலாளர்

ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் மீது நடவடிக்கை மேற் கொள்ளும் முன் தொடர்புடைய அந்த உறுப்பினரிடமிருந்து விளக்கம் பெறுவதே முறையானது.

நாடாளுமன்ற முன்னாள் செயலர் சுபாஷ் கஷ்யப் அவர்கள் தன் குறிப்புரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார் :

''The Speaker shall not come to any finding that a member has become subject to disqualification without affording a reasonable opportunity to such member to represent his case and to be heard in person. It is therefore clear that ample provision has been made in the Rules of the Presiding Officers to follow rules of natural justice while deciding cases of disqualification on ground of defection.''

1985 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின்படி உறுப்பினர் ஒருவர், தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து தன்னிச்சையாக விலகினாலோ அல்லது அவர் கட்சியின் ஆணைக்கு மாறாக அவையில் வாக்களித்தாலோ அல்லது வாக்களிக்காமல் இருந்தாலோ மட்டுமே அவர் தகுதி யின்மைக்கு உட்படுவார் என்று கருதப்படும். மாறாக அத்தகைய உறுப்பினர் ஒருவர் அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதன் காரணமாக அன்னாரது உறுப்பினர் பதவிக்கு எந்தக் குந்தகமும் ஏற்படுவதில்லை.

அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு.

1990 ஆகஸ்ட் 20] *[பேரவைத் தலைவர்]*

1985-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலில் 6-வது பத்தியின்படி பேரவை உறுப்பினர் ஒருவர் தகுதியின்மைக்கு உட்பட்டுள்ளாரா என்பதை முடிவு செய்யக் கூடியவர் பேரவைத் தலைவர் என்பதோடு அவரது முடிவே இறுதியானதும் ஆகும்.

11-50 மணி

அவை முன் உள்ள இந்த நேர்வில் அரசியல் அமைப்புச் சட்டமோ அல்லது அதன் அடிப்படையில் உருவாக்கப் பெற்றுள்ள விதி முறைகளோ நேரடியாகச் செயற்படும் நிலை உருவாகவில்லை. இது, கட்சித் தாவல் எனும் கட்டத்திற்கு வராமல் ஓர் அரசியல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பான விவகாரம் ஆகும். That is Expulsion.

Explusion குறித்து நமது சட்ட விதிகளில் ஏதும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நாடாளுமன்ற நடைமுறையில் பல தீர்ப்புகள், பிற சட்டமன்றங்களின் குறிப்புரைகள் ஆகியவை முன் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

மேலும் ஓர் உறுப்பினர் மீது எந்த நடவடிக்கை எடுப்பதாயினும் தீர்ப்புக்கு முன்னால் பல முறை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது கடமையாகும். பேரவைத் தலைவரின் தீர்ப்புக்குப் பின் எவரும் இது குறித்து நீதிமன்றம் செல்ல இயலாது எனும் நிலையில் என் பொறுப்பு இன்னும் மிகுதியாகின்றது.

பத்தாவது அட்டவணையில் உள்ள 7-வது உட்பிரிவு கீழ்க் கண்டவாறு அமைகிறது :

BAR OF JURISDICTION OF COURTS.—Notwithstanding anything in this Constitution, no court shall have any jurisdiction in respect of any matter connected with the disqualification of a member of a House under this schedule.

மேலும், திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மற்றும் எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருப்பதற்கு எந்தக் குந்தகமும் இதுவரை ஏற்படவில்லை. நடைபெற்றுள்ள நிகழ்ச்சி

அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப்பெற்றுள்ள தாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு.

கள் யாவும் பேரவைக்கு வெளியே நடைபெற்றவையே. எனவே தான் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் அக்கட்சியின் சில உறுப்பினர் கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள ஒரு முடிவு பேரவையை எந்த அளவுக்குப் பாதிப்புக்குள்ளாக்கும் என்பது குறித்து முடிவு செய்யும் முன்னர் தொடர்புடையவர்கள் தம் நிலை அறிய ஒரு வாய்ப்புத் தரும் வகையில் கடிதம் எழுதப்பட்டது.

அவர்களும் தங்கள் நிலையை விளக்கியிருப்பதுடன், தாங்கள் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களாகவே செயற்படும் வகையில் பெறப்பட்டுள்ள நீதிமன்றத் தடையாணையையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நேர்வில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளவர்களின் கருத் தினையும் கேட்டறிவது உகந்ததாய் இருக்கும் என்று கருதிய தாலும், அவர்களும், தங்கள் நிலையை விளக்க ஒரு வாய்ப்பு அளிப்பது நியாயமாக இருக்கும் என்று கருதியதாலும், அவர் களிடம் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்படி கேட்டு கடிதம் எழுதப்பெற்றுள்ளது. நீதிமன்றத்தினுடைய தடையாணையின் படி 23–8–1990 முடிய அவர்கள் துணைத் தலைவர், கொறடா முதலிய பதவிகளில் இயங்கக் கூடாது என்ற கருத்தினையும், செல்வி ஜெயலலிதா, மாண்புமிகு எஸ். ஆர். இராதா ஆகியோர் தம் கடிதங்கள் தரும் அறிவிப்புக்களையும் கருத்தில் கொண்டு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்போது நம் முன் உள்ள சிக்கல் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகிய மூவரும் அ.இ.அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டுள்ளார்களா ? அல்லது அதிலேயே நீடிக்கிறார்களா ? என்பது குறித்து முடிவு எடுப்பதுதான். எனினும் இச்சிக்கல் வழக்காக உருவெடுத்து இப்போது நீதிமன்றத்தில் உள்ளது.

பொதுவாகவே, நீதி மன்றத்திலுள்ள ஒரு பொருள் குறித்து இந்த அவை விவாதிப்பதில்லை: ' Subjudice ' என்ற மரபைக் கடைப்பிடித்து வருகிறது. இந்நிலையில் தற்போது நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடையாணை அ.இ. அ.தி.மு.க. கட்சி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாய் உள்ளபடியாலும், நீதிமன்றத்துடன் இந்த அவை ஒரு நல்ல உறவைப் பேணிக்காக்க வேண்டியதன் இன்றியமையா மரபின் காரணமாகவும், தற்போது எனது ஆய்வில் உள்ள இந்த நேர்வு குறித்த எனது முடிவினை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளேன் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.